

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.11.2024) தலைமைச் செயலகத்தில், மும்பை – கலைஞர் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் ம.சேசுராசு, செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன், புரவலர் பொ.அன்பழகன், IRS (Rtd.,), நிர்வாக குழு உறுப்பினர் வில்சன் ஆகியோர் சந்தித்து, மும்பையில் 8.12.2024 அன்று நடைபெறவுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.



ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக முன்னாள் மாவட்டக் கழகப் பொறுப்பாளர், மொழிக் காவலர், கோவை மாவட்ட முன்னாள் அவைத் தலைவர் – (நினைவில் வாழும்) மிசா பி.எஸ். ஜானகிராமன் அவர்களின் துணைவியார் டி.சம்பூர்ணம் அவர்கள் கோவையில் மறைவெய்தினார். தகவலறிந்து இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன், கோவை சென்று அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். ஜானகிராமன் – சம்பூர்ணம் இணையரின் புதல்வர் ராஜசேகர் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

## கழக ஆட்சியில் குற்றங்கள் குறைவு! கள்ளக்குறிச்சி வழக்கில்

# மனசாட்சியை அடகு வைத்துவிட்டு அறிக்கை விடும் பழனிசாமி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கடும் கண்டனம்!

**சென்னை, நவ. 22 -**

**எடப்பாடி பழனிசாமி அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களைச் சந்தித்தார்.**

அப்போது அவர் கூறியதாவது:-

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது தொடர்பாக, எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். முதலில் அவர் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக தன்னை பரிசீலித்துக் கொள்ள வேண்டும்.

கடந்த, 2018 ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்றத்தில் நெடுஞ்சாலை துறையில் 4,800 கோடி ரூபாய்க்கு ஊழல் செய்தது தொடர்பாக தி.மு.க. சார்பில் வழக்கு தொடரப்பட்டது. தி.மு.க.வின் சார்பில், நான் தான் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தேன். இருப்பினும், நாங்கள் சி.பி.ஐ. விசாரணை கோரவில்லை. ஆனால் நீதிமன்றம், இந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது.

**அ.தி.மு.க. ஆட்சியில் கன்டெய்னரில் பிடிப்பட்ட பணம்!**

சென்னை நீதிமன்றத்தின் சி.பி.ஐ. விசாரணை உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி தடை பெற்றார். இதில் சி.பி.ஐ. விசாரணை வேண்டாம் என எடப்பாடி கேட்டதற்கு, உச்சநீதிமன்றத்தில் நாங்கள் ஆட்சேபனை இல்லை எனக் கூறினோம். ஆனால் கள்ளக்குறிச்சி விவகாரத்தில் உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றம் செல்லக் கூடாது என, நேற்றைய தினம் எடப்பாடி பழனிசாமி மனசாட்சியை அடகு வைத்துவிட்டு அறிக்கை விட்டிருக்கிறார்.

கடந்த 2016ம் ஆண்டு தமிழ்நாட்டில் திருப்பூர் அருகே தேர்தல் நேரத்தில்,



570 கோடி ரூபாய் கன்டெய்னர் லாரியில் பிடிப்பட்டது. அப்போது அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றது.

கட்டுக்கட்டாக நோட்டுகளை தேர்தல் அதிகாரிகள் கைப்பற்றினர். கோவை மாவட்டத்தில் இருந்து கன்டெய்னர் லாரியில் கொண்டு வரப்பட்ட நிலையில், திருப்பூரில் நடு சாலையில் பணம் பிடிபடுகிறது. இது தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் வழக்கு தொடுத்தோம்.

**சி.பி.ஐ. விசாரணை இதுவரை தொடங்கவில்லை!**

கடந்த, 2017 - 18ல் இந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரணை என உத்தரவிடப்பட்டது. இதுவரை சி.பி.ஐ. தனது விசாரணையை துவக்கவில்லை. சி.பி.ஐ. விசாரணை எப்படி இருக்கும் என்பதற்கு இதுவே உதாரணம். ஆகவே சி.பி.ஐ. விசாரணையை எப்போதும் நாங்கள் கோருவதில்லை.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராய இறப்பு சம்பவத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்தார். 57 மருத்துவர்களை உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்ததுடன், மாவட்ட ஆட்சியர் மாற்றம். எஸ்.பி. சஸ்பென்ட். சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது என நடவடிக்கைகள் பாய்ந்தன.

ஆனால் எடப்பாடி பழனிசாமி தான் யோக்கியரை போல, இந்த வழக்கில் மேல் முறையீடு செல்லக் கூடாது என்கிறார். சட்டம் ஒழுங்கு கெட்டு போச்சு என பேசுகிறார்.

**கொடநாட்டில் நடந்த கொலை - கொள்ளை!**

அ.தி.மு.க. ஆட்சியில் நடக்காத சம்பவங்களா?மத்திய அமைச்சராக இருந்த தலித் எழில்மலையின் மருமகன் சென்னையில் கொலை செய்யப்பட்டார். இரண்டு நாட்களுக்கு முன்பு தான் அந்த வழக்கில் தீர்ப்பு கூட வந்தது.

ஆக தனிப்பட்ட கொலைகளுக்கும் சட்டம் ஒழுங்குக்கும் சம்பந்தமில்லை. இதனை எடப்பாடி பழனிசாமி புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஓசூர் நீதிமன்றம் சம்பவம், தஞ்சையில் ஆசிரியை கொலை இரண்டும் தனிப்பட்ட விவகாரங்களின் அடிப்படையில் நடந்தவை.

தூத்துக்குடி சம்பவத்தில் நடந்த உயிரிழப்பு தான் சட்டம் ஒழுங்கு பிரச்சினை.

மறைந்த ஜெயலலிதா கடைசி நாட்களில் வாழ்ந்தது கொடநாட்டில் தான். இது அதிகாரிகளுக்கும் தெரியும். கொடநாட்டில் இருந்து கோட்டையை இயக்கிக் கொண்டிருந்தார். எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது, கொடநாட்டில் நடந்த சம்பவங்களில் யாரையும் காப்பாற்ற முடியவில்லை. அங்கு பணியில் இருந்த காவலாளி உட்பட 5 கொலைகள் நடந்துள்ளது. அங்கிருந்து பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

**எடப்பாடி ஆட்சியில் எத்தனை கொலைகள்!**

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில், கடந்த, 2018 நவம்பர் 2ஆம் தேதியன்று கும்பகோணத்தில் தனியார் பள்ளி ஆசிரியை குத்திக் கொலை; கடந்த, 2018 ஆகஸ்ட் 14ல் பெரம்பலூர் அருகே பட்டபகலில் ஆசிரியை வழிமறித்து கத்தியால் குத்திக் கொலை; கடந்த 2020 டிசம்பர் 23ல் ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் ஆசிரியை படுகொலை, கணவன் கைது; கடந்த 2017 ஜனவரி 8-ல் கோவையில் கல்லூரி ஆசிரியை கழுத்து அறுத்து தீ வைத்து கொலை; கடந்த 2017 மே 9-ல் கள்ளக்காதல் விவகாரத்தில் காதலியை காரை ஏற்றி கொலை; கடந்த 2019 ஜூலை 8 ல் தூத்துக்குடியில் அரசு பள்ளி ஆசிரியர் படுகொலை நடந்துள்ளது. இவையெல்லாம் சட்டம் ஒழுங்கு பிரச்சினை என எடுத்துக் கொள்ள முடியுமா? ஆகவே எடப்பாடி பழனிசாமி புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைய ஆட்சியில், தமிழ்நாட்டில் குற்றங்கள் குறைந்து உள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் 2020ம் ஆண்டில் 1,672 கொலைகள் நடந்துள்ளது. தற்பொழுது பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் நடப்பாண்டில் கடந்த ஜூன் மாதம் 30 வரை, 792 கொலைகள் நடந்துள்ளது. இனியும் கடும் நடவடிக்கைகள் தொடரும்.

சென்னை மாநகர காவல் ஆணையராக அருண் பொறுப்பு ஏற்றதற்கு பின்பு, டி.எஸ்.பி. ரேங்கில் மண்டலம் வாரியாக ரவுடிகளை கட்டுப்படுத்த அதிகாரிகளை நியமித்து நடவடிக்கை எடுத்து வருகிறார். இதனால் சென்னையில் ரவுடியிசம் குறைந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

**தவறான கருத்தை பரப்பும் எடப்பாடி!**

**கேள்வி:** *மூன்று ஆண்டுகளில் 6 ஆயிரம் கொலைகள் நடந்துள்ளதாக எடப்பாடி பழனிசாமி சொல்லி இருக்கிறாரே?*

**ஆர்.எஸ்.பாரதி : அப்படியானால் ஒட்டு மொத்த அ.தி.மு.க. ஆட்சியில் 1 லட்சம் கொலைகள் நடந்ததாக நான் சொல்வேன். நான் தான் புள்ளி விபரத்துடன் கூறியிருக்கிறேனே. விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கள்ளக்குறிச்சி விவகாரம், ஆம்ஸ்ட்ராங் கொலை போன்ற விசயங்களை அ.தி.மு.க. பெரிதுபடுத்தியது. பிரச்சாரம் செய்தனர். இருந்தும் தி.மு.க. வெற்றி பெற்றது. மக்கள் உண்மையை புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.**

**மக்கள் மத்தியில் தவறான கருத்தை பரப்ப எடப்பாடி பழனிசாமி முட்டிப் போட்டு குட்டிக்கரணம் போடுகிறார். அது எடுபடாது.**

**அக்னி நியூஸ் சர்வீஸ் என்கிற நிறுவனம் கருத்துக் கணிப்பு எடுத்துள்ளது. மகாராஷ்டிராவில் காங் கூட்டணி வெற்றி பெறும் என அந்த நியூஸ் ஏஜென்சி கூறியுள்ளது. அந்த நிறுவனம் தான் தமிழ்நாட்டில் 54 சதவீதம் மக்கள் இந்த ஆட்சி திருப்தி என சொல்லி இருக்கிறார்கள். சில விசயங்களில் திருப்தி என 17 சதவீதம் சொல்லி உள்ளனர். 29 சதவீதம் பேர் மட்டுமே ஆட்சியில் திருப்தி இல்லை என சொல்லி இருக்கிறார்கள். ஆக 71 சதவீதம் ஆதரவு ஆட்சிக்கு உள்ளது.**

**கேள்வி :** *கொலை நடந்த இடம் பள்ளி, மருத்துவமனை, நீதிமன்றம் ஆகிய இடங்களாக இருக்கிறதே?*

**ஆர்.எஸ்.பாரதி: நடந்த சம்பவங்களை நியாயப்படுத்தவில்லை. உண்மையில் வருந்துகிறோம். அரசு நடவடிக்கை எடுத்தது. சில சம்பவங்கள் தவிர்க்க முடியாத நிலையில் உள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற சுவாதி கொலை வழக்கு என்னாச்சு?. ஆகவே சில தனிப்பட்ட நிகழ்வுகளை மையப்படுத்தி மட்டும் கேள்வி கேட்கக்கூடாது. பொள்ளாச்சி சம்பவத்தை கூட இந்த நேரத்தில் நினைவு கூர முடியும் என்றார்.**

**உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் கழக அரசு!**

**கேள்வி:** *ஆட்சி மாற்றம் அதற்காகத் தான் உங்களுக்கு மக்கள் தந்து இருக்கிறார்கள்?*

**ஆர்.எஸ்.பாரதி : இந்த ஆட்சியில் நிறைய நல்ல மாற்றம் நடந்துள்ளது.**

**கேள்வி:** *அரசின் நடவடிக்கை என்ன?*

**ஆர்.எஸ்.பாரதி: சம்பவங்கள் அனைத்தும் விரும்பத்தகாத நிகழ்வுதான். அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.**

**கேள்வி:** அ.தி.மு.க., தி.மு.க. மாறி மாறி குறைகள் கூறிக் கொள்வதாக நீதிமன்றம் கூறியுள்ளதே?

**ஆர்.எஸ்.பாரதி: அதே நீதிமன்றம் தான் எங்களை இரண்டு நாட்களுக்கு முன் பாராட்டியும் உள்ளது. ஆகவே அதில் கருத்துக் கூற விரும்பவில்லை.**

**கேள்வி:** *கள்ளக்குறிச்சி விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு எதிராக மேல் முறையீடு செய்வீர்களா?*

**ஆர்.எஸ்.பாரதி: அரசு தான் முடிவு செய்யும். கட்சி நிலைப்பாட்டை சொல்லி இருக்கிறேன்.**

**எடப்பாடியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டு!**

**கேள்வி:** *மருத்துவத் துறையில் தவறான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டி உள்ளாரே?*

**ஆர்.எஸ்.பாரதி: இதற்கு ஆதாரம் இருக்கிறதா. பத்திரிகையாளராகிய உங்களுக்கு தெரிந்தால் நீங்களே தெரிவித்து இருப்பீர்களே!**

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

---

## அற்ப அரசியலுக்காக ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும்

# அரசு மருத்துவச் சேவையை குறைகூறி குளிர்காய நினைக்காதீர்!

## எடப்பாடி பழனிசாமியா? எரிச்சல் சாமியா? – அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமான பதில்!

**சென்னை, நவ. 22 -**

**“அற்ப அரசியலுக்காக ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் அரசு மருத்துவ சேவையை குறை கூறி குளிர்காய நினைக்காதீர்” என்று எடப்பாடி பழனிசாமிக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : -

மக்களை சந்திக்காத முதலமைச்சர் வரலாற்றிலே இவர் மட்டும்தான், இவருக்கு நிகர் இவரே என்று சொல்லக்கூடிய அளவுக்கு திறன் படைத்தவர், இவர் ஆட்சிக் காலத்தில் மக்கள் சந்தித்த இன்னல்களை பட்டியலிட மனம் வலிக்கிறது. இன்னல்களுக்கு மருந்தாக மக்கள் அளித்த தீர்ப்பே திராவிட மாடல் ஆட்சி.

மக்களிடம் செல்,

அவர்களுடன் வாழ்,

அவர்களிடமிருந்து கற்றுக்கொள்,

அவர்களை நேசி,

அவர்களுக்கு சேவை செய்,

அவர்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்து தொடங்கு,

அவர்களிடம் இருப்பதை வைத்து கட்டமைப்பு செய்....!

என்றார் பேரறிஞர் அண்ணா.

**சாதனைப் பட்டியல்!**

பேரறிஞர் அண்ணா வழியில் வந்தவர்கள் நாங்கள். திராவிட மாடல் ஆட்சியில் மருத்துவ துறையில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு சாதனை படைத்துவருவது மக்களுக்கு புரிகிறது. சில மண்டூளிகளுக்கு புரிய வேண்டும் என்பதற்காக மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை சாதனை பட்டியலை மீண்டும் நினைவு கூருகிறேன்.



- **மக்களைத் தேடி மருத்துவம்,**
- **இன்னுயிர் காப்போம் – நம்மைக்காக்கும் – 48,**
- **கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம்,**
- **இதயம் காப்போம் திட்டம்,**
- **சிறுநீரகம் பாதுகாப்புத் திட்டம்,**
- **பாதம் பாதுகாப்போம் திட்டம்,**
- **தொழிலாளர் தேடி மருத்துவம்,**
- **மக்களைத்தேடி ஆய்வகத் திட்டம்,**
- **நடப்போம் நலம் பெறுவோம் திட்டம்,**
- **கண்ணொளி காப்போம் திட்டம்.**

இப்படி பக்கம் பக்கமாக திராவிட மாடல் ஆட்சியில் மருத்துவத்துறையில் உருப்பெற்ற திட்டங்களை பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். இது மட்டுமின்றி இத்துறையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்ட மருத்துவக் கட்டமைப்புகள், மருத்துவ உபகரணங்கள், மருத்துவப் பணி நியமனங்கள் என்று சொன்னால் பட்டியல் நீளும். எடப்பாடி அவர்களுக்கு நாக்கு தள்ளும் என்பதில் ஐயமில்லை, பழனிசாமி அவர்களுக்கு இது எல்லாம் புரியுமா என்று தெரியவில்லை, இருந்தாலும் சொல்ல வேண்டியது நம் கடமை.

முதலமைச்சர் அவர்கள் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டங்களில் ஒன்றான மக்களைத்தேடி மருத்துவம் ஐக்கிய நாடுகள் சபையில் பாராட்டபெற்று அதற்கு விருது வழங்கப்பட்டுள்ளது. திராவிட மாடல் அரசின் மருத்துவத்துறையின் சாதனை ஐக்கிய நாடுகள் சபையால் பாராட்டப்பட்டுள்ளது.

இந்த விருது என்பது உலக அளவில் உச்சபட்ச அங்கீகாரம் என்பதை எடப்பாடி பழனிசாமி அவர்கள் அறிந்திருப்பாரா என்பது ஐயமே!. எடப்பாடி பழனிசாமி அறிக்கையில் குறிப்பிடும் தகவலை போல் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட மக்கள் இன்னல்களை பட்டியலிட்டால் ஆயிரம் பக்கம் கொண்ட தனிப் புத்தகமே போடலாம்.

**ஒன்றிய அரசின் விருதுகளே சாட்சி!**

முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் மருத்துவத்துறை சேவை, தரம் உயர்ந்துள்ளது என்பதற்கு ஒன்றிய அரசு வாரி வழங்கி உள்ள விருதுகள் சாட்சி. உதாரணத்திற்கு தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது (NQAS - National Quality Assurance Standards certificate) தமிழ்நாடு இதுவரை பெற்ற விருதுகளின் எண்ணிக்கை - 614, திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பெற்ற விருதுகளின் எண்ணிக்கை - 545. அதேபோல் மகப்பேறு துறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ் (LAQSHYA Labour Room Quality Improvement Initiative) தமிழகம் இதுவரை பெற்ற விருதுகளின் எண்ணிக்கை - 84, திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பெற்ற விருதுகளின் எண்ணிக்கை - 55.

உதாரணத்திற்காக சொல்லப்படும் இவை பத்து ஆண்டுகால மக்கள் விரோத ஆட்சிக்கும் மூன்றரை ஆண்டுகால பேரறிஞர் அண்ணா வழியில் நடைபெறும் மக்கள் நலன் விரும்பும் ஆட்சிக்கும் உள்ள வேறுபாடு.

முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியின் சிறப்பை உணர்ந்த மக்கள், தனியார் மருத்துவமனைக்குச் செல்வதைத் தவிர்த்து அரசு மருத்துவமனைகளைப் பயன்படுத்துகிறார்கள். அதன் காரணமாக அரசு மருத்துவமனைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. தாங்கள் செய்ய நினைக்கும் அற்ப அரசியலுக்காக ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் அரசு மருத்துவ சேவையைக் குறை கூறி குளிர் காய நினைக்காதீர்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் என்பதை உணராமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி மட்டுமே மனதில் கொண்டு எதையும் அறியாமல் புரியாமல் அறிக்கை வெளியிடுவது காரணமாக எடப்பாடி பழனிசாமி - எரிச்சல்சாமியாக மக்களுக்கு காட்சியளிக்கிறார்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையின் வாயிலாக பதிலளித்துள்ளார்.